முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்

முன்னிலை: திருமதி.G.சுபத்திரா தேவி, M.L.,
முதன்மை அமர்வு நீதிபதி , கடலூர்.

2025-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் நாள் வெள்ளிக்கிழமை

**அமர்வு வழக்கு எண்.391 /2017-ல்**

**குற்றவியல் பல்வகை மனு எண்.5097/2025**

காவல் ஆய்வாளர்,
அண்ணாமலை நகர் காவல் நிலையம்,
குற்ற எண்.125/2014 .. மனுதாரர்/குற்றமுறையிடுபவர்

எதிர்

1. அருள் பிரசாத்
2. கிருஷ்ணன் (எ) கட்டகிருஷ்ணன்

.. எதிர்மனுதாரர்கள்/ 1 மற்றும் 10 எதிரிகள்

இம்மனு 11.09.2025 அன்று என் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்து, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் திரு.பி.பக்கிரி அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வி.சிவக்குமார் அவர்களும் ஆஜராகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, அமர்வு வழக்கு எண்.391/2017-ல் தொடர் விசாரணை செய்ய அனுமதி வழங்க கோரி, அண்ணாமலைநகர் காவல் ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில், மனுதாரர் 25.07.2024-ம் தேதி முதல் அண்ணாமலைநகர் காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தான் இந்த வழக்கு கோப்பை பார்வையிட்டதில் கடந்த 03.05.2014-ம் தேதி 12.30 மணிக்கு அண்ணாமலைநகர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் வெற்றிவீரன் என்பவர் நிலையப் பொறுப்பில் இருக்கும் போது முத்துநாயகம், த/பெ. முத்தையா, கிராம நிர்வாக அலுவலர் கூத்தன்கோயில், உசுப்பூர் (பொறுப்பு), சிதம்பரம் வட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி, தான் உசுப்பூர் கிராம நிர்வாக அலுவலராக பொறுப்பு வகிக்கின்றேன் என்றும், 03.05.2014 ம் தேதி காலை 10.45 மணியளவில் தனது கிராம உதவியாளர் செல்லதுரை என்பவர் தன்னிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு கதவிலக்கம் 311, 2 வது தெற்கு குறுக்கு சாலை, மாரியப்பா நகரில் உள்ள ஓய்வு பெற்ற பேராசிரியர் பன்னீர்செல்வம் என்பவருக்குச் சொந்தமான வீட்டின் கீழ்புற தனி தனி போர்ஷனில் அண்ணாமலை பல்கலைகழகத்தில் பணிபுரியும் அருள் என்பவர் வாடகைக்கு வசிக்கும் வீட்டில் காலை 10.30 மணியளவில் பலத்த வெடி சத்தம் கேட்டதாக தெரியவந்த தகவலின் பேரில் தானும் தனது உதவியாளர் செல்லதுரையும் சம்பவம் நடந்த வீட்டிற்கு சென்றபோது கதவு திறந்தே கிடந்தது என்றும், அறை முழுவதும்

இரத்த சிதறல்களுடன் வீட்டில் பொருட்கள், வெடித்த மருந்து பால்ரஸ்கள், ஆணிகள், ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து சிதறிக் கிடந்தன என்றும், அறையின் மேற்கு பக்கச் சுவரில் வெடித்ததில் சுவர் விரிசல் ஏற்பட்டுள்ளது என்றும், சம்பவ அறையில் ஒரு பிஸ்டல், 4 வீச்சரிவாள்கள், ஒரு ஸ்டீல் ராடு, ஒரு கறி வெட்டும் கத்தி பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத தோட்டாக்களும் கிடந்தன என்றும், பிச்சுவாக் கத்தி ஒன்று, அருள் பிரசாத் என்பவரது அண்ணாமலை பல்கலைக் கழக ஊழியர் அடையாள அட்டை J.மோகன்ராம் மற்றும் K.சங்கர்லால் ஆகியோரது பான் கார்டுகள், J.ராஜேஷ்கண்ணன் என்பவரது பார்கவுன்சில் அடையாள அட்டை, பாஸ்கரன் என்பவரது வாக்காளர் அடையாள அட்டை ஆகியவைகள் சம்பவ அறையில் கிடக்கின்றன என்றும், இச்சம்பவம் தொடர்பாக அருகில் வசிக்கும் சுரேஷ், ரமேஷ் மற்றும் நெடுமாறன் ஆகியோரிடம் விசாரித்ததில் அருள் வீட்டில் இருந்த மோகன்ராம் என்பவருக்கு வெடித்ததில் பலத்தக் காயம் ஏற்பட்டதாகவும், உடனிருந்த நான்கைந்து பேர் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருந்ததாகவும் தெரிவித்தார்கள் என்றும், இச்சம்பவம் தொடர்பாக தக்க நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்தப் புகார் மனுவைப் பெற்று வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அப்போதைய காவல் ஆய்வாளரான திருமதி.மீனா அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பின்னர் காவல் ஆய்வாளர் திரு.முருகானந்தம் அவர்களால் தொடர் விசாரணை செய்யப்பட்டு 06.02.2015-ல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 1, 5, 10 மற்றும் 12 எதிரிகளுக்கு எதிராக அமர்வு வழக்கு

எண்.391/2017-ம், 3 மற்றும் 6 எதிரிகளுக்கு எதிராக அமர்வு வழக்கு எண்.1/2021-ம், 8-ஆம் எதிரிக்கு எதிராக அமர்வு வழக்கு எண்.394/2022-ம் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறது என்றும், 2, 4, 7, 9 மற்றும் 11 எதிரிகளுக்கு எதிராக முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.20/2022 ஆக நீதித்துறை நடுவர் எண்.1, சிதம்பரம் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும்,

மேற்படி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட 1) கருப்பு மற்றும் சிவப்பு நிற கார்பன் செல்போன்-1, 2) வெள்ளை நிற நோக்கியா செல்போன்-1 3) கருப்பு மற்றும் சிவப்பு நிற சாம்சங் செல்போன் 1, 4) கருப்பு மற்றும் சிவப்பு நிற பின்பக்க கவர் இல்லாத நோக்கியா செல்போன்-1, 5) நீலநிற நோக்கியா செல்போன்-1 ஆகிய செல்போன்களில் உள்ள தரவுகளை பற்றிய முழுமையான புலன்விசாரணை செய்யாமலும், மேலும் மேற்கண்ட செல்போன்களை சென்னை தடய அறிவியல் ஆய்வக அலுவலகத்திற்கு பகுப்பாய்வுக்கு அனுப்பப்படாமலும், வழக்கில் கண்ட எதிரிகளில் யார் யாருடைய செல்போன் என்று அறுதியிட்டு குறிப்பிடப்படாமலும், தொலைபேசியில் எதிரிகள் பேசிக்கொண்ட விவரங்கள் சம்மந்தமாகவும் சரியாக புலன் விசாரணை செய்யப்படவில்லை என்பது புலப்படுகிறது என்றும், மேற்கண்ட விவரங்கள் சம்மந்தமாக முதன் முதலாக விசாரிக்கப்பட வேண்டும் என்றும், ஏற்கனவே இது சம்மந்தமாக விசாரிக்கப்படாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் தமிழ்நாடு முழுவதும் பல கொலை மற்றும் கொள்ளை வழக்குகளில் சம்மந்தப்பட்டவர்கள் என்றும், மேற்படி

எதிரிகள் அனைவரும் பல கொலை மற்றும் கொள்ளையில் ஈடுபட்டதற்கும், தங்களுக்குள் திட்டம் தீட்டுவதற்கும் தகவலை பரிமாறிக்கொள்வதற்கும் இவர்கள் பயன்படுத்திய செல்போன்கள் முக்கிய தடயங்களாக இருந்து வந்துள்ளது என்றும், எனவே, இவ்வழக்கை தொடர் விசாரணை செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில், இம்மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், ஒரு வழக்கில் புலன்விசாரணை அதிகாரி தனது விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துவிட்டால் பின்பு மீண்டும் மேற்கொண்டு புலன் விசாரணை செய்யும் வாய்ப்பானது தடை செய்யப்பட்டு விட்டது என்று எண்ணுதல் கூடாது என்பது சட்டமாகும் என்றும், ஆனால் அந்த விசாரணையானது எந்த சூழ்நிலையின்போது மேற்கொள்ளப்படலாம், எந்தக்காலகட்டத்திற்குள் மேற்கொள்ளப்படலாம். எப்போது மேற்கொள்ளப்படலாம் என பல நிபந்தனைகள் உள்ளன என்றும், அந்த வகையில் அந்த விசாரணை அதிகாரி, புதிய சாட்சியத்தையோ அல்லது வரைமொழி வாய்மொழி சாட்சியத்தையோ, புதிய ஆவண சாட்சியத்தையோ பெற்றிருத்தல் வேண்டும் என்றும், அந்த சாட்சியத்தினால் புதிய உண்மைகள் வெளிப்படும் என்கின்ற நிலை ஏற்பட்டு, சூழ்நிலை மாற்றம் நிலவி, நீதியின் நலன் நிலைநாட்டப்படும் என்கின்ற நிலை இருத்தல் வேண்டும் என்றும், இந்த நிலையானது இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்படுவதற்கு முன்பாக இருப்பின் நீதித்துறை

நடுவரின் அனுமதி இன்றியும், கோப்பிற்கு எடுக்கப்பட்டுவிட்டால் நீதித்துறை நடுவரின் அனுமதி உத்திரவு பெற்றும் புலன் விசாரணையை மேற்கொள்ளலாம் என்றும், ஆனால் இவ்வழக்கானது அவ்வாறு எந்தவொரு புதிய சாட்சியத்தையோ, அந்த சாட்சியம் நீதி நலனுக்கு அத்தியாவசியமானதாகவோ காட்டப்படவில்லை என்றும், கடந்த 2014-ம்வருடத்தில் பதியப்பட்ட இவ்வழக்கின் FIR ஆனது அப்போதைய காவல் ஆய்வாளரான திருமதி.மீனா அவர்களால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, பின்னர் காவல் ஆய்வாளர் திரு.முருகானந்தம் அவர்களால் தொடர் விசாரணை செய்யப்பட்டு 06.02.2015-ல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பின்னர் நீதித்துறை நடுவர் எண்.1, சிதம்பரம் அவர்களால் P.R.C.No. 17/2015-ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு பிரிவு 209 Cr.P.C.ன்படி இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அமர்வு வழக்கு எண்.391/2017 ஆக கோப்பிறகு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் 18 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்காக கடந்த 3 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது என்றும், மேலும் அரசு தரப்பு சாட்சிகள் புகார் அளித்தவர், ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள், (அரசு அதிகாரிகள் தவிர) மற்றும் பலர் பிறழ்சாட்சிகளாக, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், 11 ஆண்டுகளுக்குப்பிறகு அலைபேசிகளை தடய அறிவியில் ஆய்வகத்திற்கு அனுப்பி பகுப்பாய்வு செய்வது முற்றிலும் இயலாதது என்றும், எந்த தகவலும் கிடைக்க வாயப்பில்லை என்றும், இவ்வழக்கு எதிர்மனுதாரர்கள்/எதிரிகள் கடந்த 11

ஆண்டுகளாக வேலை இழந்து வாழ்வாதாரத்தை இழந்து, 8 ஆண்டுகளாக நீதிமன்ற விசாரணைக்கு ஆளாகியுள்ளனர் என்றும், புலன் விசாரணை சரியாக செய்யப்படவில்லை என, ஆய்வாளர் கூறியுள்ளது முற்றிலும் புறந்தள்ள வேண்டியது (In efficiency on the part of the IO. is not Investigating Officer an excuse to file a petition/letter u/sec. 173 (8) Cr.P.C.) என்றும், தலைமறைவான எதிரிகள் மீது உள்ள வழக்கு பிரிக்கப்பட்டு விசாரணை ஆரம்பிக்கவே இல்லை என்றும், தற்போது உள்ள வழக்கில் புலன் விசாரணை அதிகாரிகள் (இருவர்) மட்டுமே விசாரிக்கப்படவேண்டும் என்றும், இந்த நிலையில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு முற்றிலும் ஆதாரமற்றது என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், மனுதாரரின் இம்மனுவில் "சரியாக புலன்விசாரணை செய்யப்படவில்லை என்பது புலனாகிறது" என குறிப்பிடப்பட்டுள்ளது வியப்படையும் வகையில் உள்ளது என்றும், எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு எதிரிகள் தரப்பில் பெறப்பட்ட Lacuna (வெற்றிடம் இடைவெளி, சந்தேகம்) மற்றும் உறுவாக்கிய சந்தேகங்களை (Create Doubts) நிரப்புவதற்காகவும் கால நீட்டிப்பு செய்து விரைவில் நீதி கிடைக்காமல் செய்வதற்காக இம்மனுவானது தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனுவை அனுமதித்தால் நீதியின் நலனுக்கு குந்தகம் ஏற்படும் என்றும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் இவ்வழக்கை விரைந்து முடிக்க உத்தரவிட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் வழக்கு முடியவில்லை என்றும், எனவே, மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்து, வழக்கில் மேற்கொண்டு

புலன் விசாரணை அதிகாரியை விசாரிக்க உத்தரவிட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,

1. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. **தீர்வு** :

**இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.**

6. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கானது விசாரணை அதிகாரிகளின் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது என்பதும், மேலும் தாய் வழக்கிலிருந்து பிரிதெடுக்கப்பட்ட வழக்குகளும் நிலுவையில் உள்ளன என்பதும் தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பில், கைப்பற்றப்பட்ட 1) கருப்பு மற்றும் சிவப்பு நிற கார்பன் செல்போன்-1, 2) வெள்ளை நிற நோக்கியா செல்போன்-1 3) கருப்பு மற்றும் சிவப்பு நிற சாம்சங் செல்போன் 1, 4) கருப்பு மற்றும் சிவப்பு நிற பின்பக்க கவர் இல்லாத நோக்கியா செல்போன்-1, 5) நீலநிற நோக்கியா செல்போன்-1 ஆகிய செல்போன்களில் உள்ள தரவுகளை பற்றிய முழுமையான புலன்விசாரணை செய்யாமலும், மேலும் மேற்கண்ட செல்போன்களை சென்னை தடய அறிவியல் ஆய்வக அலுவலகத்திற்கு பகுப்பாய்வுக்கு அனுப்பப்படாமலும், வழக்கில் கண்ட எதிரிகளில் யார் யாருடைய செல்போன் என்று அறுதியிட்டு குறிப்பிடப்படாமலும், தொலைபேசியில் எதிரிகள் பேசிக்கொண்ட விவரங்கள் சம்மந்தமாகவும் சரியாக புலன் விசாரணை செய்யப்படவில்லை என்பது புலப்படுகிறது என்றும், மேற்கண்ட

விவரங்கள் சம்மந்தமாக முதன் முதலாக விசாரிக்கப்பட வேண்டும் என்றும், ஏற்கனவே இது சம்மந்தமாக விசாரிக்கப்படாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் தமிழ்நாடு முழுவதும் பல கொலை மற்றும் கொள்ளை வழக்குகளில் சம்மந்தப்பட்டவர்கள் என்றும், மேற்படி எதிரிகள் அனைவரும் பல கொலை மற்றும் கொள்ளையில் ஈடுபட்டதற்கும், தங்களுக்குள் திட்டம் தீட்டுவதற்கும் தகவலை பரிமாறிக்கொள்வதற்கும் இவர்கள் பயன்படுத்திய செல்போன்கள் முக்கிய தடயங்களாக இருந்து வந்துள்ளது என்றும், எனவே, இவ்வழக்கை தொடர் விசாரணை செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில், விசாரணை அதிகாரியின் சாட்சியத்திற்காக கடந்த 3 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது என்றும், 11 ஆண்டுகளுக்குப்பிறகு அலைபேசிகளை தடய அறிவியில் ஆய்வகத்திற்கு அனுப்பி பகுப்பாய்வு செய்வது முற்றிலும் இயலாதது என்றும், எந்த தகவலும் கிடைக்க வாயப்பில்லை என்றும், மனுதாரரின் மனுவில் "சரியாக புலன்விசாரணை செய்யப்படவில்லை என்பது புலனாகிறது" என குறிப்பிடப்பட்டுள்ளது வியப்படையும் வகையில் உள்ளது என்றும், எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு எதிரிகள் தரப்பில் பெறப்பட்ட Lacuna (வெற்றிடம் இடைவெளி, சந்தேகம்) மற்றும் உறுவாக்கிய சந்தேகங்களை (Create Doubts) நிரப்புவதற்காகவும் கால நீட்டிப்பு செய்து விரைவில் நீதி கிடைக்காமல் செய்வதற்காக இம்மனுவானது தற்போது தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த மனுவை அனுமதித்தால் நீதியின் நலனுக்கு குந்தகம் ஏற்படும் என்றும் கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இந்த மனுவை பொறுத்து கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இவ்வழக்கானது விசாரணை அதிகாரிகளின் சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்தபோதிலும், மனு சாராம்சங்களைப் பரிசீலிக்கும்போது, இவ்வழக்கில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட செல்போன்கள் சம்பந்தமாக தொடர் விசாரணை மிகவும் அவசியமானதாகவும், மனுதாரரின் மனு ஏற்கத்தக்கதாகவும் அமைந்துள்ளதாகவே காணப்படுகிறது. எனவே, வழக்கின் தன்மை மற்றும் பொருண்மைகளை கருத்தில்கொண்டும், நீதியின் நலன் கருதியும், மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கது என்று முடிவு கண்டு, அவ்வாறே பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. முடிவாக, இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2025.09.19 16:18:03 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,

கடலூர்.

Draft/Fair Order
Crl.M.P.No.5097/2025 in
S.C.No. 391/2017
Dt. 19.09.2025.